

# இடம் பொருள் கலைஞர்

88

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு (MBC)!**



# மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு (MBC)

*1969*-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர், தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், ஆளுநர் உரை விவாதத்தின் போது ஆற்றிய உரையில், “நான் சமுதாயத்தின் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு. நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக என் உயிரையே பணயமாக வைத்துப் போராடுவேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்’’- என்று கூறி, பிற்படுத்தப்பட்டோர் நலனில் தாம் கொண்டிருந்த அக்கறையைத் தெளிவுபடுத்தினார். தெளிவுபடுத்தியது மட்டுமல்ல, அதற்காக, தொலைநோக்குடன் அவர் உருவாக்கியதுதான் ஓய்வுபெற்ற நீதிபதி சட்டநாதன் தலைமையிலான ஆணையம்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் சமுதாயங்களின் முன்னேற்றத்தில், திராவிட இயக்கத்தின் பங்கு, குறிப்பாக தமிழக முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞரின் பங்கு என்ன என்பதை சட்டநாதன் ஆணையம் அளித்த பரிந்துரைகளை நிறைவேற்றியதிலிருந்தே அறியலாம்.

தமிழ்நாட்டில், 19-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் எழுந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கோரிக்கை, இன்று கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இந்தியாவிலேயே எங்கும் இல்லாதவகையில், 69 சதவிகித இடஒதுக்கீட்டினைத் தமிழ்நாட்டில் உறுதி செய்துள்ளது. அந்தக் கோரிக்கையைத் தொடங்கிவைத்தது நீதிக்கட்சி என்றால், நிறைவேற்றிக் காட்டிய மையப்புள்ளியில் தி.மு.கழகமும், கலைஞரும் உள்ளதை, காலம் பதிவு செய்துள்ளது.

## நலனை ஆராய, குழு

தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்யும் கோரிக்கைகள் பலமுறை எழுப்பப்பட்டு வந்தாலும், கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றபின், 13.11.1969-இல் ஓய்வுபெற்ற நீதிபதி சட்டநாதன் அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும், அவர்தம் நிலையை மேம்படுத்தவும், அரசு அதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராயவும், கல்வி வசதிகள், அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம், வீட்டுவசதி, மானிய உதவிகள், சமுதாய நல வளர்ச்சி ஆகியவற்றில் அவர்களுடைய நிலையை மேம்படுத்த, மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்யவும், தமிழ்நாட்டு வரலாற்றில், முதன்முதலில் அமைக்கப்பட்ட குழு இதுதான்.

இந்தக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், அதுவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவிகிதம், பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு 25 சதவிகிதம், பொதுப் போட்டிக்கு 59 சதவிகிதம் என்றிருந்த இட ஒதுக்கீட்டு அளவை மாற்றியமைத்து, 7.6.1971 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம்; பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு 31 சதவிகிதம்; பொதுப் போட்டிக்கு 51 சதவிகிதம் என்று ஆணை வெளியிடப் பட்டது.

அதன் பிறகு வந்த எம்.ஜி.ஆர் ஆட்சியில் ’பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உரிய சலுகைகளைப் பெற வேண்டுமானால் ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது’ என்ற உச்சவரம்பை விதித்து, எம்.ஜி.ஆர் ஆணை பிறப்பித்தார். அதன் தொடர்ச்சியாக, மக்களிடையே எழுந்த எதிர்ப்பின் காரணமாக 1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்தது அ.தி.மு.க. அதையடுத்து, உச்சவரம்பு ஆணையைத் திரும்பப் பெற்று பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 33 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தியது எம்.ஜி.ஆர் தலைமையிலான அரசு.

## தனி இட ஒதுக்கீட்டுப் போராட்டம்

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்ற பல்வேறு சாதியினரும் கல்வி நிலையங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் தங்களுக்குரிய பங்கினைப் பெற முடியவில்லை யென்ற உணர்வு மேலோங்கி, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு தனி ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கை வைத்தனர். 1987-ஆம் ஆண்டில், இந்தக் கோரிக்கை தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் குறிப்பாக, வன்னியர் சாதி மக்களால் வீச்சாக முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தின் போது தமிழ்நாட்டில் சாலை மறியல், ரயில் மறியல் என பதற்றங்கள் ஏற்பட்டதுடன், போராடிய 21 மக்கள் உயிரிழக்கவும் நேர்ந்தது. அந்தக் கோரிக்கை எம்.ஜி.ஆர். அரசால் ஏற்கப்படாத நிலையில், 1989-ம் ஆண்டு மூன்றாம் முறையாக முதல்வர் பொறுப் பேற்ற கலைஞர் அதை நிறைவேற்றினார்.

வன்னியர்கள் உள்ளிட்ட சீர்மரபினர் (DNC) மற்றும் சலவைத் தொழிலாளர், மீனவர், வண்ணார் போன்ற 107 சாதிகளை இணைத்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) என்ற வகுப்பை உருவாக்கி, 20% இடஒதுக்கீட்டுக்கு வழி செய்தார். போராட்டத்தில் உயிரிழந்த வன்னியர்களுக்கு இழப்பீட்டு தொகையாக 3 லட்சத்தையும், அப்போது அளித்து அந்தக் குடும்பங்களின் துயர் நீக்கினார்.

## கடும் தண்டனை வழங்க ஆணை

1998-ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியின்போது, அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வுசெய்ய அந்தத் துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகள்படி, 10 மற்றும் பத்துக்கும் மேற்பட்ட பணிநிலைப் பிரிவுகளில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி மாற்றியமைக்கப்பட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறையைப் பின்பற்றலாம் என்று 21.9.1999 என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**நீண்ட சட்டப் போராட்டங்கள், ஆட்சி நிர்வாக முறைகள் மூலம் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டினை நிலை நிறுத்தியவராக கலைஞர் உயர்ந்து நிற்கிறார்.**

எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இன சுழற்சி முறையைப் பின்பற்றாதவர்கள் மீது, குடிமைப்பணி விதியின் கீழ், ஒழுங்குநடவடிக்கை எடுத்து கடும்தண்டனை வழங்கவும் 1999-ஆம் ஆண்டு அரசாணை வழி செய்தது.

அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப் படும்போது, முதல் 10 இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்பது, 1992 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது, அந்த விதையை 2001-ஆம் ஆண்டு மாற்றிய கலைஞர், அதை இரண்டு இடங்களாக உயர்த்தினார். அதன் மூலம் ஒவ்வொரு பத்து இடங்களிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இரண்டு இடங்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. இப்படியான நீண்ட சட்டப் போராட்டங்கள், ஆட்சி நிர்வாக முறைகள் மூலம் பிற்படுத்தப் பட்டோர் இட ஒதுக்கீட்டினை நிலை நிறுத்தியவராக கலைஞர் உயர்ந்து நிற்கிறார். அந்தப் போராட்டங்களின் வழியேதான், அவர் முதல்முறை ஆட்சிப் பொறுப் பேற்றபோது, அளித்த உறுதிமொழியை நிறைவேற்றிக் காட்டினார்.

**...வலம் வருவோம்**

---

### ஆரியர்களின் படையெடுப்பும், அழிந்த சிந்துவெளியும்…

**சி**ந்துவெளி ஆய்வு, நூற்றாண்டு கவனம் பெற்றுள்ள நிலையில், ஆரியர்களின் இந்தியப் படையெடுப்பு என்பது, சிந்துவெளி அழிப்பில் இருந்துதான் தொடங்குகிறது என, தனது முகநூலில் எழுதி இருக்கிறார் எழுத்தாளர் சூர்யா சேவியர்.

“1922 -ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வாளர் ஜான் மார்ஷல் நடத்திய அகழ்வாய்வில், ‘மொகஞ்சதாரோ’, ‘ஹரப்பா’ என்ற இரு நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. உலக வரலாறு குறித்த சிந்தனைப் போக்கில், பெரும் மாற்றத்தை இந்தக் கண்டுபிடிப்புகள் உருவாக்கின. இவற்றின் கட்டமைப்புகள் கி.மு.2500 ல் நாகரிகத்தின் உச்சநிலையை அடைந்திருந்ததை உலகிற்கு உணர்த்தியது. இதில் ஆச்சரியமான ஒரு விசயம் யாதெனில், அங்கு கண்டுபிடிக்கப்பட்ட செங்கலின் அளவு இன்று வரை மாறாமல் இருப்பதுதான்.

அங்கிருந்த மிகப்பெரும் தானியக் களஞ்சியம் தனியுடமை இல்லாத கூட்டு வாழ்க்கையைப் பறைசாற்றியது. எகிப்தின் மன்னராட்சி முறையும், சுமேரியாவின் நாடு போன்ற அமைப்பும் இங்கு இல்லை. ஆனால், அவர்களை விட, நாகரிகத்தில் உயர்ந்து இருந்தார்கள். அதற்கு இங்குள்ள பாசன மேலாண்மையே முக்கிய காரணமாக இருந்தது. இதன் எல்லை மிகவும் குறுகியது. இதையொட்டிய வேறு நகரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எகிப்து, சுமேரியா போன்று பெரும் பாசனக் கால்வாய்கள் இங்கு இல்லை. அணை கட்டி அதன் அருகிலேயே விவசாயம் செய்துள்ளனர். இவர்கள் இரும்பு காலத்திற்கு முந்தையவர்கள். எனவே, கலப்பையை இவர்கள் பயன்படுத்தவில்லை.

ஆற்று வெள்ளம் கொண்டு வந்த வண்டலைப் பயன்படுத்தியே, விவசாய முறை இருந்தது. தங்கள் தேவை போக மீதி உணவுகளை எகிப்து, சுமேரியாவுக்கு விற்றுள்ளனர். தற்போதைய பஹ்ரைன் அன்று முக்கியமான வணிகச் சந்தையாக இருந்துள்ளது. தங்கள் தேவைக்கான உணவை உற்பத்தி செய்து, அனைவரும் பங்கிட்டு வாழ்ந்த, உயர்ந்த நாகரிகம் கொண்ட இந்த மக்கள் அழிந்தது எப்படி என்பதே கேள்வி?

சிந்து சமவெளியில் தீப்பற்றி எரிந்த தடயங்களும் கரிமப் படிவ ஆய்வில் கண்டறியப்பட்டன.இம்மக்களின் தேவைக்கான காடுகளை, ஆரியர்கள் அழித்ததும் கூட இதற்கான காரணமாக இருக்கலாம்” என அவரது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### :ப்ளாஷ்பேக்



**தலைவர், பேராசிரியருடன் இனிய சந்திப்பு!**



கே.எம்.ஜெய்னுலாவுதீன்

1999-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களையும் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. புழல் ஒன்றியக் கழகம் சார்பாக, ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக நிதி வசூல் செய்து தலைவரிடம் ஒப்படைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அன்றைய ஒன்றியக் கழகச் செயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றியப் பிரதிநிதி கே.டி.சுந்தரேசன் மற்றும் பல கழக உடன்பிறப்புகள் உடனிருந்தனர்.

**– கே.எம்.ஜெய்னுலாவுதீன், புழல் ஒன்றியம், திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

### கருவூலம்

**பொதுக்குழுவுக்கு ஆலோசனை!**


1951-ஆம் ஆண்டு, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விரிவான முதல் பொதுக்குழுவுக்கான யோசனைகளை வழங்கவேண்டும் என பேரறிஞர் அண்ணா வேண்டுகோள் விடுத்திருந்தார். கூட்டத்துக்கு வருவதற்கான சம்மதம், மற்றும் ஆலோசனைகளை ‘திராவிட நாடு’ இதழுக்கு அனுப்பி வைக்கவும், அண்ணா வேண்டுகோள் விடுத்திருந்தார். பொதுக்குழுக் கூட்ட முடிவுகளை 18.03.1951 தேதியில் ‘திராவிட நாடு’ இதழ் வெளியிட்டது. அந்தக் கூட்டத்தில் தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் முனையில் தீவிரமாகப் பணியாற்ற திட்டம் தயாரிக்க மூவர் குழு அமைக்கப்பட்டது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

612

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131